# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 208/ந/2019

நாள் : 26/02/2020

திரு C. சுப்பிரமணி,
கீழ்கட்டளை,
சென்னை – 117
– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
பல்லவபுரம்
– எதிர் மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், பல்லவபுரம் நகராட்சி, கீழ்கட்டளை, பல்லவன் நகர், 4–வது குறுக்குத் தெரு, 41,42 கதவு எண்களிட்ட முகவரியில் வசிக்கும் திரு C. சுப்பிரமணி அவர்களின் மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 208/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் விசாரணையின் போது மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், பல்லவபுரம் நகராட்சி, கீழ்கட்டளை, பல்லவன் நகர், 4–வது குறுக்குத் தெரு, 41,42 கதவு எண்களிட்ட முகவரியில் வசிக்கும் திரு C. சுப்பிரமணி என்பவர், மேற்குறிப்பிட்ட முகவரியில் உள்ள வீட்டிற்கு 54410 எண்ணிட்ட வரிவிதிப்பில் 2007–2008 முதல் 2014–2015–ஆம் ஆண்டின் வரை சொத்து வரியும் மற்றும் 22.07.2014 நாளிட்ட இரசீது மூலம் பாதாள சாக்கடை வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்கள் சேர்த்து ரூ.25,000/– செலுத்தியதற்கு கணினியில் பதிவுகள் இல்லை என்றும், எந்த நகராட்சிப் பணியாளர்களின் கணினியில் வரி வசூலிக்கப்பட்டுள்ளது என்று கோரியுள்ளதுடன் தான் கட்டிய ரூ. 25,000/–க்கு எந்த நகர சபை பொறுப்பேற்கும் என்று கோரியுள்ளார். மேலும், தான் நகராட்சியில் கோரிய கோரிக்கைகளுக்கு பதில் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், காலிமனை வரி விதிப்பு செய்ய எந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது என்றும் கோரியுள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு குறித்து நகராட்சி ஆணையர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்களில், 2007–2008 முதல் 2014–2015 வரை முதல் அரையாண்டு வரை சொத்துவரி மட்டுமே செலுத்தியதாகத் தெரியவருகிறது. சொத்துவரி செலுத்தியதை காலியனை வரி என தவறாகக் கருதி திரும்ப வழங்கிட கோரியுள்ளார் என்றும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடமும் 12.02.2020 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது சில ஆவணங்களை சமர்ப்பித்தார். மேலும், 2007 முதல் 2015 வரையில் சொத்துவரி செலுத்தியதற்கான இரசீதுகளையும் சமர்ப்பித்தார்.

4. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்களை ஆய்வு செய்ததில் பல்லவபுரம் நகராட்சிக்குட்பட்ட பல்லவன் நகர், 4–வது குறுக்குத் தெரு, 41 கதவு எண்ணிட்ட வீட்டிற்கான சொத்துவரி மட்டுமே 2007 முதல் 2015 ஆண்டுகளில் செலுத்தப்பட்டதாகத் தெரிகிறது. முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட வரியினை செலுத்தியதற்கான கணினிப் பதிவுகளை கண்டறிய இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே, முறையீட்டு மனுதாரர் செலுத்திய சொத்து வரி மற்றும் பிறவரி இனங்கள் அனைத்தும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளுமாறு பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 26–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

3.3.2020

3/3/2020

பெறுநர்

1. திரு C. சுப்பிரமணி,
41,42, 4–வது குறுக்குத் தெரு,
பல்லவன் நகர், கீழ்க்கட்டளை,
சென்னை – 600 117.

2. நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
குரோம்பேட்டை,
சென்னை – 600 044.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பி.ரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி